

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2050 | நவம்பர் 21, 2019 | புரட்சி 18 | முழக்கம் 45 | விலை: ரூ.3.00


## தமிழர் – சிங்களர் முரண்பாடு கூர்மையடைகிறது

# இலங்கை தேர்தல் முடிவுகள்: உணர்த்தும் உண்மைகள்

இலங்கை தேர்தலில் சிங்கள பெரும்பான்மையே மீண்டும் வெற்றி பெற்றுள்ளது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி (இலங்கை மக்கள் முன்னணி) வேட்பாளர் கோத்தபய ராஜபக்சே 52.5 சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார். ராஜபக்சேயின் சகோதரர் இவர். இலங்கை அரசியல் சட்டப்படி இரண்டு முறைக்கு மேல் அதிபர் பதவியில் போட்டியிட முடியாது என்பதால் அவர் சார்பாக அவரது தம்பி நிறுத்தப்பட்டார்.

தமிழ் ஈழ விடுதலைப் போராட்டக் காலத்தில் இந்திய இராணுவம் அங்கே அமைதிப் படை என்ற பெயரில் சென்றபோது இந்திய இராணுவத்தை வெளியேற உத்தரவிட்டவர் அப்போது ஜெயவர்த்தனேயைத் தொடர்ந்து அதிபரான பிரேமதாசா. பிரேமதாசா விடுதலைப் புலிகள் ஒப்பந்தம் ஒன்றும் அப்போது உருவானது. சில மாதங்களில் பிரேமதாசா குண்டு வெடிப்பில் பலியானார். இலங்கையில் இப்போது ஆளும் கட்சியான அய்க்கிய தேசிய கட்சியின் வேட்பாளராக பிரேமதாசாவின் மகன் சஜித் பிரேமதாசா போட்டியிட்டார். வடக்கு - கிழக்கு மாநிலங்களில் வாழும் தமிழர்களும் சஜித் பிரேமதாசாவுக்கு வாக்களித்து, கோத்தபய ராஜபக்சேவை வரவிடாமல் தடுக்க வேண்டும் என்ற முடிவை எடுத்தனர். தமிழர்கள், முஸ்லிம்கள் அதிகம் வாழும் மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத் தீவு, திரிகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் 90 சதவீத வாக்குகள் சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவாகவே விழுந்தன (41.99 சதவீதம்). சிங்களர் பகுதியில் வாக்குகள் கோத்தபய ராஜபக்சேவுக்கு ஆதரவாகவே விழுந்தன. 10 சதவீத வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார் கோத்தபய ராஜபக்சே.

ராஜபக்சே அதிபராக இருந்தபோதுதான் தமிழர்கள் மீதான இறுதிக்கட்ட இனப்படுகொலை 2009 மே மாதம் நடந்தது. அப்போது இராணுவத் துறை செயலாளராக இருந்தவர் கோத்தபய ராஜபக்சே. சர்வதேச சட்டங்களை காலில் போட்டு மிதித்து இனப் படுகொலைக்கு ஆணையிட்டவர் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளானவர். இராணுவத்திடம் சரணடைவதற்காக வெள்ளைக் கொடியுடன் வந்த விடுதலைப் புலிகள் முன்னணித் தலைவர்களையும் தமிழர்களையும் சுட்டுக் கொல்ல உத்தரவிட்டவர் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளானவர். இலங்கையிலிருந்து வெளியேறி அமெரிக்காவுக்குச் சென்று அமெரிக்க குடியுரிமைப் பெற்று வாழ்ந்தவர். பிறகு மீண்டும் இலங்கை திரும்பியவர்.

தனக்கு வாக்களிக்காதவர்களுக்கும் அவர்கள் மதம், இனம் என்ற அடையாளத்தையும் தாண்டி, தான் பிரதமர் என்ற பொறுப்போடு செயல்படுவேன் என்று தேர்தல் வெற்றிக்குப் பிறகு கோத்தபய ராஜபக்சே கூறியிருக்கிறார். இது ‘சடங்குக்கான’ பேச்சா அல்லது உண்மையின் வெளிப்பாடா என்பது இனி அவரது செயல்பாடுகள் வழியாகவே முடிவுக்கு வர முடியும்.

இந்தத் தேர்தல் முடிவுகள், தமிழர்-சிங்களர் முரண்பாடுகளை மேலும் கூர்மைப்படுத்தியிருக்கிறது. 2009 முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்குப் பிறகு தமிழர்கள் மீது இராணுவத் தாக்குதல், குண்டு வீச்சுகள் ஏதும் இல்லை என்பதைத் தவிர தமிழர்களின் உரிமைகளை அங்கீகரிக்கும் முன்னெடுப்புகள் ஏதும் நிகழவில்லை என்பதே உண்மை.

அய்.நா.வின் மனித உரிமை ஆணையம் போரின்போது நிகழ்ந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பான ‘கலப்பு விசாரணை’ ஒன்றை (இலங்கையும் சர்வதேச நாடுகளும் சேர்ந்து நடத்தும் விசாரணை) நடத்தும் தீர்மானத்தை 2015ஆம் ஆண்டு நிறைவேற்றியது. இத்தீர்மானத்தை இலங்கை அரசும் ஏற்றுக் கொண்டது. ‘இனப் படுகொலை’ என்ற எல்லைக்கு வராமல், ‘மனித உரிமை மீறல்’ என்ற அடிப்படையில் விசாரணைக்கு உடன்பட்ட இலங்கை அரசு அது தொடர்பாக எந்த முன்னெடுப்பையும் எடுக்கவில்லை. அய்.நா. தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு 2017 ஆம் ஆண்டு கொழும்பில் காணாமல் போனோரைக் குறித்து நடவடிக்கை எடுக்கும் அலுவலகம் ஒன்றைத் திறந்தார்கள். காணாமல் போனவர்கள் என்றால் அவர்கள் இலங்கையின் சிறைக்குள்ளே இருக்க வேண்டும் அல்லது இராணுவத்தால் கொல்லப்பட்டிருக்க வேண்டும். இந்த உண்மைகள் வெளியே வரும்போது சர்வதேச சமூகத்துக்கு இலங்கை பதில் சொல்ல வேண்டிய கட்டாயம் உருவாகும். எனவே கண்துடைப்புக்காகவே இந்த அலுவலகம் திறக்கப்பட்டது. நியாயமாக இந்த அலுவலகம் தமிழர் வாழும் பகுதியில்தான் திறக்கப்பட்டிருக்க வேண்டும். சிங்களர் பெரும்பான்மையினராக வாழும் கொழும்புவுக்கு வந்து தமிழர்கள் தங்கள் பிரச்சினைகளை அச்சமின்றி வெளிப்படுத்த முடியுமா? அது மட்டுமின்றி இந்த அலுவலகத்துக்கு பொறுப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டவர் ஷெவேந்திரா சில்வா என்ற இராணுவ அதிகாரி, இனப்படுகொலைக்குக் காரணமான அதிகாரிகளில் ஒருவர் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்.

இலங்கை அரசுப் பதிவேடுகள் அடிப்படையிலேயே 65,000 தமிழர்கள் காணாமல் போனவர்கள். (Enforced disappearance) காணாமல் போனவர்கள் எண்ணிக்கையில் உலகில் இரண்டாவது இடத்தில் இலங்கை அரசு இருக்கிறது. காணாமல் போன தங்கள் குடும்பத்தினரைக் கண்டறிய வேண்டும் என்று பெற்றோர்கள் 1000 நாட்கள் தொடர் போராட்டம் நடத்தினார்கள். போராடிய பெற்றோர்களில் 53 பேர் தங்கள் குடும்ப உறுப்பினர் கதி என்னவாயிற்று என்பது தெரியாமலேயே உயிரிழந்து விட்டனர். இந்த நிலையில் அய்.நா. மனித உரிமை ஆணையத்தில் இலங்கை அரசும் ஏற்றுக் கொண்ட ‘மனித உரிமை மீறல்’ குறித்த தீர்மானத்திலிருந்து இலங்கை அரசு தன்னை விடுவித்துக் கொள்ளும் என்று கோத்தபய ராஜபக்சே, சிங்களர்களுக்கு தேர்தலுக்குமுன் உறுதியளித்ததையும் குறிப்பிட வேண்டும். ஆக, மனித

4ஆம் பக்கம்)

## டிசம். 22 கோவையில் நீலச் சட்டைப் பேரணி: தோழர்களே, தயாராவீர்!



பெரியாரிய உணர்வாளர் கூட்டமைப்பு டிசம்பர் 22இல் கோவையில் நீலச்சட்டைப் பேரணிக்கும் ஜாதி ஒழிப்பு மாநாட்டுக்கும் அழைப்பு விடுத்துள்ளது.

திருச்சியில் கருஞ்சட்டைப் பேரணி நடத்தி பெரும் வெற்றி பெற்றோம். தொடர்ந்து தமிழ்நாடு ‘காவி’கள் மண் அல்ல என்பதை உணர்த்தவே நீலச்சட்டைப் பேரணி!

திருச்சிப் பேரணியில் திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் குடும்பம் குடும்பமாகத் திரண்டு வந்ததைப் போல் – அந்த எண்ணிக்கையையும் மிஞ்சக் கூடிய அளவில் நீல சட்டைப் பேரணிக்கு திரண்டு வரவேண்டும்!

ஜாதி எதிர்ப்பு – மதவெறி எதிர்ப்புக்கு அம்பேத்கரும்-பெரியாரும் நமக்கு இரு கண்கள்; அவர்கள் தான் நமக்கு வழிகாட்டிகள்; பார்ப்பனர்கள் ஆதிக்கம் நிறைந்த அரசியல் சட்ட வரைவுக் குழுவில் இடம் பெற்ற புரட்சியாளர் அம்பேத்கர், தனது அறிவு ஆற்றல் சட்டப் புலமையால் சமூக நீதி என்ற இடஒதுக்கீடு தத்துவத்தை சட்டத்தின் வழியாக நிலைநிறுத்தினார்.

பட்டியல் இனப் பிரிவினருக்கான இடஒதுக்கீடு மட்டுமல்ல; பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டை அமுல்படுத்துவதற்கு சட்டத்தின் கதவுகளைத் திறந்து விட்டவரும் அம்பேத்கர் தான்!

மதவாத – பார்ப்பனியம், அம்பேத்கர் பெரியாருக்கிடையே முரண்பாடுகளை உருவாக்கிக் காட்ட முயலுகின்றன. அம்பேத்கர் இந்துத்துவ ஆதரவாளர் என்று சித்தரிக்க வரலாற்றைத் திரிக்கிறார்கள்.

வடநாட்டில் ஜாதி – தீண்டாமை வெறி தாண்டவமாடும் நிலையில் ஒப்பீட்டளவில் தமிழகம் ஓரளவு முன்னேறி நிற்பதற்கு அடித்தளமிட்டது அம்பேத்கர்-பெரியாரியல் சிந்தனைகள்தான். இன்னும் நாம் ஜாதி ஒழிப்புக் களத்தில் வெகுதூரம் பயணிக்க வேண்டிய நிலையில் பார்ப்பனிய மதவாதம் தமிழ்நாட்டை குறி வைக்கிறது. அதை முறியடிக்க உறுதியேற்போம்!

நீலச் சட்டைப் பேரணி – இந்துத்துவ எதிர்ப்புப் பேரணி!

ஜாதியை எதிர்ப்போர் – ஒன்று திரளும் பேரணி!

சமூக விடுதலைக்கான எழுச்சிப் பேரணி!

கழகத் தோழர்களே; கோவை நோக்கித் திரண்டு வாரீர்!

கோவையை ‘நீல’ நிறமாக்குவோம்!

# அயோத்தி தீர்ப்பு : முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி எழுப்பும் கேள்விகள்

***அயோத்தியில் இராமன் கோயில் கட்டலாம் என்று உச்சநீதிமன்ற அமர்வு வழங்கிய தீர்ப்புக் குறித்து, ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி அசோக் குமார் கங்குலி எழுப்பி உள்ள கேள்விகள் 'தி டெலிகிராப்' ஏட்டில் வெளி வந்துள்ளது.***

"அங்கு ஒரு மஸ்ஜித் இருந்ததைச் சிறுபான்மையினர் பல தலைமுறைகளாகக் கண்டு வருகிறார்கள். அது இடிக்கப்பட்டுள்ளது. அதன் மீது உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி ஒரு கோயில் கட்டப்பட இருக்கிறது. இது என் மனதில் ஒரு சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

அரசியலமைப்பின் மாணவராக, அதை ஏற்றுக் கொள்வது எனக்கு கொஞ்சம் கடினமாகும்.

1856-57இல் இல்லையென்றாலும், நிச்சயமாக 1949 முதல், அங்கு தொழுகை நடத்தப்பட்டு வந்துள்ளது. அது ஆவணங்களில் உள்ளது. எனவே, நமது அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தபோதும், தொழுகை நடத்தப்பட்ட அந்த இடம், ஒரு மஸ்ஜித் என்று அங்கீகரிக்கப்பட்டால், சிறுபான்மை சமூகத்திற்கு அவரவர்களின் மத சுதந்திரத்தைப் பாது காக்கும் உரிமை உண்டு. அது அரசியலமைப்பால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட ஒரு அடிப்படை உரிமை.

இன்று ஒரு முஸ்லீம் என்ன நினைப்பார்? ஒரு மஸ்ஜித் பல ஆண்டுகளாக இருந்தது, அது இடிக்கப்பட்டது. இப்போது அந்த இடம் ராம் லல்லாவுக்கு சொந்தமானது என்று கூறி, அந்த இடத்தில் ஒரு கட்டடம் வர நீதிமன்றம் அனுமதிக்கிறது. பல நூற்றாண்டுகளுக்கு முன்பு இருந்த நில உடைமை குறித்து உச்சநீதிமன்றம் முடிவு செய்யுமா?

அரசியலமைப்பு வந்தபோது அங்கு ஒரு மஸ்ஜித் இருந்தது என்பதை உச்சநீதிமன்றம் மறுக்குமா?

"அரசியலமைப்பு மற்றும் அதன் விதிகள் மூலம், அதைப் பாதுகாப்பது உச்சநீதிமன்றத்தின் பொறுப்பாகும்."

அரசியலமைப்புச் சட்டம் ஏற்றுக் கொள்ளப் படுவதற்கு முன்பு இருந்தால் உச்சநீதிமன்றத்தின் பொறுப்பில் வராது. அதற்கு முன்பு இந்திய ஜனநாயக குடியரசு என்று எதுவும் இருக்கவில்லை.

பின்னர், ஒரு மஸ்ஜித் இருந்த இடத்தில், ஒரு பௌத்த ஸ்தூபம் இருந்த இடத்தில், ஒரு தேவாலயம் இருந்த இடத்தில், இதுபோன்ற தீர்ப்புகளை நாம் வழங்க ஆரம்பித்தால், நிறைய கோயில்கள் மற்றும் மஸ்ஜித்துகள் மற்றும் பிற கட்டமைப்புகள் இடிக்கப்பட வேண்டியிருக்கும். நாம் புராண 'உண்மைகளுக்கு' செல்ல முடியாது. ராம் யார்? வரலாற்று ரீதியாக நிரூபிக்கப்பட்ட சூழ்நிலை ஏதேனும் உள்ளதா? இது நம்பிக்கை சார்ந்த விஷயம்.

விசுவாசத்தின் அடிப்படையில், நீங்கள் எந்த முன்னுரிமையையும் பெற முடியாது என்று உச்சநீதிமன்றம் இந்த முறை கூறியது. மஸ்ஜித்தின் கீழ் கட்டமைப்புகள் இருந்தன என்று அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் அந்த கட்டமைப்பு ஒரு கோயில் அல்ல. ஒரு கோவிலை இடித்ததன் மூலம் மஸ்ஜித் கட்டப்பட்டது என்று யாரும் சொல்ல முடியாது. இப்போது ஒரு மஸ்ஜித்தை இடிப்பதன் மூலம், ஒரு கோயில் கட்டப்படுகிறதா?

500 ஆண்டுகளுக்கு முன்பு நிலத்தை யார் வைத்திருந்தார்கள், யாருக்காவது தெரியுமா? நாம் வரலாற்றை மீண்டும் உருவாக்க முடியாது.

எது இருந்ததோ அதைப் பாதுகாப்பதே நீதிமன்றத்தின் பொறுப்பு. எதுவாக இருந்தாலும் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும். வரலாற்றை மீண்டும் உருவாக்க நீதிமன்றத்திற்கு எந்த கடமையும் இல்லை. ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்பு என்ன இருந்தது என்பதை நீதிமன்றம் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை.

மஸ்ஜித் இருந்தது என்றுதான் நீதிமன்றம் சொல்ல வேண்டும் அது ஒரு உண்மை. ஒரு வரலாற்று உண்மை மட்டுமல்ல, (ஆனால்) எல்லோரும் பார்த்த ஒரு உண்மை. அதன் இடிப்பு அனைவராலும் பார்க்கப்பட்டது. அதை மீட்டெடுக்க வேண்டும். அவர்களுக்கு(முஸ்லிம்களுக்கு) ஒரு மஸ்ஜித்தை வைத்திருக்க உரிமை இல்லை என்றால், ஒரு மஸ்ஜித்தை கட்ட ஐந்து ஏக்கர் நிலத்தை வழங்குமாறு அரசாங்கத்தை எவ்வாறு வழிநடத்துகிறீர்கள்? ஏன்? மஸ்ஜித் இடிக்கப்பட்டது முறையானது அல்ல என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்கள்.

நானாக இருந்தால் ஒன்று அந்த பகுதியில் மஸ்ஜித்தை மீண்டும் கட்டியிருக்க சொல்லியிருப்பேன். அல்லது அது சர்ச்சைக்குரியதாக இருந்தால், அந்த பகுதி, 'மஸ்ஜித்தும் இல்லை, அந்த பகுதியில் கோயிலும் இல்லை' என்று சொல்லியிருப்பேன்.

நீங்கள் ஒரு மருத்துவமனையையோ அல்லது பள்ளிக்கூடத்தையோ, அல்லது கல்லூரியை உருவாக்கலாம் என்று கூறியிருப்பேன். வெவ்வேறு பகுதிகளில் ஒரு மஸ்ஜித் அல்லது கோவில் கட்டவும் கூறியிருப்பேன். அதை இந்துக்களுக்குக் கொடுக்க முடியாது. இது விஸ்வ இந்து பரிஷத் அல்லது பஜ்ரங் தளத்தின் கோரிக்கை. அவர்கள் எந்த மஸ்ஜிதையும் இன்றோ, பின்னரோ இடிக்க முடியும். அவர்கள் அரசாங்கத்தின் ஆதரவைப் பெற்றுள்ளனர். இப்போது அவர்கள் நீதித்துறையின் ஆதரவையும் பெறுகிறார்கள்.

நான் மிகவும் கலக்கம் அடைகிறேன். பெரும்பாலோர் இதை தெளிவாக சொல்லப்போவதில்லை."

நீதிபதி அசோக்குமார் கங்குலியின் கவலைதான் மதச் சார்பற்ற ஜனநாயகக் கோட்பாட்டை விரும்புகின்ற அனைவரது கவலையாகும்!

# நீலச் சட்டைப் பேரணி : கழகம் தயாராகிறது

**சேலம்** – சேலம் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட கழகக் கலந்துரையாடல் கூட்டம், 16.11.2019 அன்று சேலம் இளம்பிள்ளை நகர அமைப்பாளர் தனசேகர் இல்லத்தில் காலை 11 மணிக்கு தொடங்கி நடைபெற்றது. இக்கூட்டத்திற்குக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை தாங்கினார். சேலம் மாவட்டத் தலைவர் கருப்பூர் சக்தி, கிழக்கு மாவட்ட செயலாளர் டேவிட், மேற்கு மாவட்ட செயலாளர் கோவிந்தராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கலந்துரையாடல் கூட்டத்தில், நீலச் சட்டைப் பேரணிக்கு தோழர்கள் அதிகளவில் பங்கேற்பது, சேலத்தில் அலுவலகம் அமைப்பது, கிளைக் கழக பயிற்சி வகுப்புகள், மாணவர் பிரச்சினைக்கான துண்டறிக்கைகளை கல்லூரி முன்பு மாணவர்களிடத்தில் கொடுப்பது போன்ற கருத்துக்கள் தோழர்களால் முன்வைக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது. இறுதியாக கழகத் தலைவர், தோழர்களிடத்தில் கழகச் செயல்பாடுகள் மற்றும் நீலச் சட்டைப் பேரணிக்கு அதிகளவில் பங்கேற்பதன் நோக்கம் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

கலந்துரையாடலில் புதிய பொறுப்பாளர்கள் அறிவிக்கப்பட்டனர். சேலம் மாநகரத் தலைவர், சேலம் சரவணன் (மூணாங்கரடு), கிழக்கு மாவட்டத் தலைவர் சக்திவேல், சேலம் மாவட்ட செயலாளர் டேவிட், சேலம் மாவட்ட துணைத் தலைவர் ஏற்காடு பெருமாள், சேலம் மாவட்ட அமைப்பாளர்கள் பாலு, முத்து மாணிக்கம் , சேலம் மாநகர செயலாளர் பரமேஷ் மேற்கண்ட புதிய பொறுப்பாளர்களை கழகத் தலைவர் அறிவித்தார். அதன்பின், பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு முன்மொழியப்பட்டன.

- சேலம் மாவட்டம் திராவிடர் விடுதலைக் கழகத்திற்கு தலைமை அலுவலகம் வேண்டும் என்றும் அதற்கான ஏற்பாடுகளைத் தொடங்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்படுகிறது.
- பெரியார் உணர்வாளர் கூட்டமைப்பின் சார்பாக வருகின்ற 22.12.2019 கோவையில் நடைபெறவுள்ள நீலசட்டைப் பேரணிக்கு அதிகளவில் கலந்து கொள்ள வேண்டும்.
- கழகத்தின் புதிய உறுப்பினர் சேர்க்கைக்கான வேலைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அதற்காக தோழர்கள் கிளைக் கழகப் பயிற்சி வகுப்புகள், பள்ளி, கல்லூரிகள் முன்பு துண்டறிக்கை கொடுத்தும், தெருமுனை பிரச்சாரங்கள் மேற்கொள்வது.

போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இறுதியாக சேலம் மாநகரச் செயலாளர் பரமேஸ்குமார் நன்றி கூறினார்.

**கோவையில்** – 17.11.2019 ஞாயிறு அன்று காலை 11 மணி அளவில் கோவை வ.உ.சி. பூங்காவில் கோவை மாநகர திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் டிசம்பர் இறுதிக்குள் 250 'புரட்சிப் பெரியார் முழக்கம்', 70 'நிமிர்வோம்' சந்தாக்களை சேர்த்து தொகையையும் சந்தா புத்தகத்தையும் தலைமையிடம் ஒப்படைப்பது எனவும்,

நவம்பர் 26 - ஜாதியைப் பாதுகாக்கும் அரசியல் சட்டப் பிரிவுகளைக் கொளுத்தி சிறைச் சென்ற போராளிகளுக்கு வீரவணக்கம் மற்றும் ஜாதி ஒழிப்பு உறுதிமொழி எடுப்பது எனவும், மற்றும் அதையொட்டி கோவை மாவட்டத்தில், அரசே தன் நிதியை ஒதுக்கி அமைத்துக் கொடுத்த இரட்டை சுடுகாடுகள் உள்ள ஊர்களின் பட்டியலை எடுத்து தலைமையின் ஆலோசனைப்படி போராட்டத்தை முன்னெடுப்பது எனவும், டிசம்பர் 2வது வாரத்தில் கோவை அன்னூரில் திராவிடர் விடுதலை கழகத்தின் கொடியேற்று விழா மற்றும் பெயர்ப் பலகை திறப்பு விழா நடத்துவது எனவும்,

டிசம்பர் 22 பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு சார்பில் கோவையில் நடைபெறவுள்ள நீலச்சட்டை பேரணி மற்றும் ஜாதி ஒழிப்பு மாநாடு வெற்றிகரமாக நடத்திட களப்பணியாற்றுவது திவிகவுக்கு நிர்ணயிக்கப்பட்ட நிதியை சேர்த்து கொடுத்திட உழைப்பது மற்றும் தோழர்கள் திரளாக கலந்து கொள்வது என முடிவு செய்யப்பட்டது. தோழர்கள் நேருதாசு, நிர்மல், வெங்கட், மருதாசலம், விஷ்ணு கலந்து கொண்டனர்.

**சென்னையில்** – திராவிடர் விடுதலைக் கழகத்தின் சென்னை மாவட்ட கலந்துரையாடல், 17.11.2019 அன்று மாலை 6 மணிக்கு தலைமைக் கழக அலுவலகத்தில், கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் தொடங்கி நடைபெற்றது. மாவட்ட செயலாளர் உமாபதி முன்னிலை வகித்தார்.

கோவையில் நீல சட்டைப் பேரணிக்கு அதிகளவில் கலந்து கொள்வது, அதற்கான ஏற்பாடுகள், சென்னையின் பல பகுதிகளில் இயக்கத்தைக் கட்டமைப்பது போன்றவை விவாதிக்கப்பட்டன. தோழர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய கருத்துகளை பதிவு செய்தனர். அதையடுத்து கழகப் பொதுச் செயலாளர் நீலச் சட்டைப் பேரணி குறித்தும், பேரணியில் அதிகளவில் கலந்து கொள்வதன் முக்கியத்துவத்தையும் விவரித்து பேசினார். இறுதியாக மாவட்டத் தலைவர் வேழவேந்தன் நன்றி கூறினார்.

– புரட்சிப் பெரியார் முழக்கம் 21.11.2019

## சபரிமலை தீர்ப்பு: உச்சநீதிமன்றம் – மார்க்சிஸ்ட் கட்சியின் தடுமாற்றங்கள்

சபரிமலை அய்யப்பன் கோயிலில் இளம் வயது பெண்களை அனுமதிக்கலாம் என்று தீர்ப்பளித்த உச்சநீதிமன்றம், சீராய்வு மனுவின் மீது அளித்த தீர்ப்பில் நீர்த்துப் போகச் செய்து விட்டது.

ஏற்கனவே அளித்த தீர்ப்பு வழியாகப் பெண்கள் கோயிலுக்குப் போக உரிமை கிடைத்தது. 7 பேர் கொண்ட அமர்வுக்கு வழக்கு விசாரணையை இப்போது மாற்றியுள்ளனர். இறுதி விசாரணையின் தீர்ப்பு வரும் வரை சபரிமலை கோயிலுக்குள் பெண்கள் செல்லத் தடையில்லை என்றும் இப்போதும் உச்சநீதிமன்றம் (பெரும்பான்மை தீர்ப்பு) தெளிவுபடுத்தியிருக்கிறது. ஆனால் கேரளாவில் ஆளும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சி சபரிமலைக்கு வரும் இளம் பெண்களை காவல்துறையைப் பயன்படுத்தி தடுத்து வருகிறது.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தோல்வியைத் தழுவியதற்குக் காரணம் சபரிமலையில் பெண்கள் நுழைய அனுமதித்ததுதான் என்று கட்சிக்குள்ளேயே ஒரு பிரிவினர் கருதுகிறார்கள்.

தேர்தல் தோல்விக்குப் பிறகு கட்சி நடத்திய உயர்மட்டக் குழு கூட்டத்தில் பெண்ணுரிமை கண்ணோட்டத்தோடு கோயிலுக்கு வந்த பெண்களுக்கு அரசு பாதுகாப்பு தந்திருக்கக் கூடாது. அதுவும் ஒரு தோல்விக்குக் காரணம் என்று குழு முடிவுக்கு வந்தது. இப்போது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, தனது கடந்த கால முடிவிலிருந்து பின் வாங்கியதற்கு இதுவே காரணம் என்று தெரிகிறது.

எந்த சமூக சீர்திருத்தமும் சட்டத்தினாலோ, தீர்ப்புகளினாலோ வெற்றி பெற்று விட முடியாது. சமுதாய சீர்திருத்தக் கருத்துகளை மக்களிடமும் கட்சியினரிடமும் பரப்பி கருத்துருவாக்கம் செய்யப்பட வேண்டும்.

ஜாதி ஒழிப்பு - மத எதிர்ப்பு - மூடநம்பிக்கை எதிர்ப்பு - கடவுள் மறுப்பு கருத்துகளை மக்களிடம் பேசத் தேவையில்லை. அதைவிட ஆட்சிக்கு வருவதற்கான அரசியல் பிரச்சினைகளை மட்டுமே பேசினால் போதும் என்ற முடிவுக்கு கம்யூனிஸ்ட் கட்சிகளே வந்து விடுவதால் இத்தகைய சட்டங்களை அமுல்படுத்துவதற்கு கட்சிக்குள்ளேயே எதிர்ப்புகள் வருகின்றன. விழிப்புணர்வு பெறாத மக்கள் 'நம்பிக்கை'களிலிருந்து விடுபடவும் மறுக்கிறார்கள். 'உயர் ஜாதி ஏழை'களுக்கான 10 சதவீத இட ஒதுக்கீடு சட்டத்தை பா.ஜ.க. ஆட்சி கொண்டு வந்த போதும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவு நிலைப்பாட்டையே எடுத்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# அய்.அய்.டி. ‘மர்ம தேச’த்தில் என்ன நடக்கிறது?

***கே**ரளாவிலிருந்து சென்னை அய்.அய்.டி.க்கு படிக்க வந்த பாத்திமா லத்தீப் என்ற இஸ்லாமிய மாணவி, அய்.அய்.டி. விடுதியில் நவம்பர் 9ஆம் தேதி தூக்கிட்டு உயிரை மாய்த்திருக்கிறார். மத ரீதியாகத் தான் துன்புறுத்தப்பட்டதால் இந்த முடிவுக்கு அவர் தள்ளப்பட்டிருக்கிறார். தனது அலைபேசியில் தன்னை துன்புறுத்தி, மதிப்பெண்களைக் குறைத்த சுதர்சன் பத்மநாபன் உள்ளிட்ட மூன்று பேராசிரியர்கள் பெயரைக் குறிப்பிட்டுள்ளார். கேரள முதலமைச்சர் இப்பிரச்சினையை தமிழக முதல்வரிடம் கொண்டு வர, தமிழகக் காவல்துறை சி.பி.சி.அய்.டி. துறை வழியாக விசாரணை நடத்தி வருகிறது. கோட்டூர்புரம் காவல்துறை மதிப்பெண் குறைந்ததால் தற்கொலை செய்து கொண்டதாக அய்.அய்.டி. நிர்வாகத்தின் குரலையே எதிரொலித்து வழக்கை மூடி மறைக்க முயற்சித்தது. இப்போது கேரள மாநில முதல்வர் தலையீட்டால் வழக்கு விசாரணையில் புதிய திருப்பம் உருவாகி யிருக்கிறது. இந்தப் பின்னணியில் அய்.அய்.டி. வரலாற்றை மீண்டும் சுருக்கமாக நினைவுகூர வேண்டியுள்ளது.*

*செ*ன்னை அய்.அய்.டி.யில், தலித், பிற்படுத்தப் பட்ட மாணவர்கள் மீது திணிக்கப்படும் பாகுபாடு களை எதிர்த்து 1998இல் தொடங்கி, 2000 ஆண்டு வரை மூன்று ஆண்டு காலம் தொடர் போராட் டங்களை பெரியார் திராவிடர் கழகம் முன்னின்று நடத்தியது. தலித் அமைப்புகளை இணைத்து, ‘சமூகநீதி மீட்பு இயக்கம்’ ஒன்றை உருவாக்கி போராடியது.

பொதுக் கூட்டங்கள், முற்றுகைப் போராட் டங்கள் ஆளுநரிடம் மனு என்ற வடிவில் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. ‘அய்.அய்.டி. வளாகத்துக்குள் விடுதலைப்புலிகள் ஊடுருவுகிறார்கள்’ என்று புதுடில்லியிலிருந்து சுப்ரமணியசாமியைப் பிடித்து அறிக்கை வெளியிட வைத்தது அய்.அய்.டி. நிர்வாகம். அப்போது இங்கே பணியாற்றிய 420 பேராசிரியர்களில் தலித் இரண்டு பேர்; பிற்படுத்தப்பட்டோர் 20 பேர்; ஒரு முஸ்லீம்கூட இல்லை. இவர்கள்கூட இடஒதுக்கீட்டின் கீழ் நிரப்பப்படவில்லை. திறந்த போட்டியில் போட்டி யிட்டு வந்தவர்கள்தான். 15 ஆண்டுகளுக்குப் பிறகும் இந்த நிலையில் எந்த மாற்றமும் நிகழ்ந்திடவில்லை.


2019 நிலவரப்படி மொத்த பணியிடங்கள் 900, அதில் 684 நிரப்பப்பட்டன. அதில் பேராசிரியர்கள், இணை பேராசிரியர், துணை பேராசியர்களின் ஜாதிவாரி எண்ணிக்கை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்டன. இதன்படி பேராசிரியருக்கான பணிக்கு, எஸ்.சி. பிரிவில் மொத்தம் 47 இடங்களில் 5 இடங்கள் மட்டுமே நிரப்பப்பட்டன. எஸ்.டி.பிரிவில் 23 இடங்களில் ஒரு இடம் மட்டுமே நிரப்பப்பட்டது. ஓ.பி.சி பிரிவில் 84 இடங்களில் 29 நிரப்பப்பட்டுள்ளன. ஓ.சி. பிரிவில் மொத்தம் 154 இடங்களுக்கு 273 இடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

இணை பேராசிரியருக்கான பணிக்கு, எஸ்.சி. பிரிவில் 27 இடங்களில் 4, எஸ்.டி. பிரிவில் 13 இடங்களில் ஒன்று, ஓ.பி.சி. பிரிவில் 49 இடங்களில் 19, ஓ.சி. பிரிவில் 90 இடங்களுக்கு 156 இடங்களும் நிரப்பப்பட்டுள்ளன.

துணை பேராசிரயருக்கான பணிக்கு, எஸ்.சி பிரிவில் 30 இடங்களில் 7, எஸ்.டி பிரிவில் 15 இடங்களில் ஒன்றும், ஓ.பி.சி பிரிவில் 53 இடங்களில் 18, ஓ.சி. பிரிவில் 98 இடங்களில் 170 ம் நிரப்பப் பட்டுள்ளன. 2019 ஆம் ஆண்டு ஆசிரியருக்காக விண்ணப்பித்த 271 பேரில் 5 பேர் மட்டுமே நேர்காணலுக்கு அழைக்கப்பட்டனர். 2018 ஆம் ஆண்டு 682 பேரில் 16 பேர் மட்டுமே நேர்காணலுக்கு அழைக்கப்பட்டனர்.

அய்.அய்.டி.யின் ஜாதி வெறிக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்குகள் ஏராளம். அத்தனையும் விசாரணைக்கு வராமல் கிடப்பில்தான் போடப்பட்டுள்ளன. ஒரே ஒரு முறைதான் அய்.அய்.டி. ஜாதியத்துக்கு எதிரான ஒரு தீர்ப்பு உயர்நீதிமன்றத்திலிருந்து வந்தது. வழக்கு இதுதான். அய்.அய்.டி. இயக்குனராக பல ஆண்டுகாலம் வேதகால ஆட்சி நடத்திய நடராஜன் என்பவர் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து அந்தப் பதவிக்கு ஆனந்த் என்ற பார்ப்பனர் கொல்லைப்புற வழியாக வந்துவிட்டார்.

அவரது நியமனம் முறையாக வெளிப்படைத் தன்மை இல்லாமல் இரகசியமாக அரங்கேற்றமானது. அதற்கான ஆவண சான்றுகளும் இருந்தன. வழக்கை விசாரித்த உயர்நீதிமன்ற நீதிபதி இந்த நியமனத்தின் முறைகேடுகளை எடுத்துக்காட்டி, இயக்குநர் நியமனத்தை செல்லாது என்று அறிவித்தார். இந்த




வரலாற்றுப் புகழ்மிக்க தீர்ப்பை வழங்கியது நீதிபதி சந்துரு. இதுவும் நிலைத்திடவில்லை. அடுத்த சில வாரங்களிலேயே மேல்முறையீட்டில் நிர்வாகம் தங்களுக்கு சாதகமான தீர்ப்பைப் பெற்றுவிட்டது.

### அய்.அய்.டி.யின் வரலாறு

நாட்டில் தொழில்நுட்ப உயர்கல்வியை உலகத் தரத்துக்கு உயர்த்த 1959ஆம் ஆண்டில் இந்திய தொழில்நுட்பக் கழகங்கள் பம்பாய், சென்னை, டெல்லி, கான்பூர், கோரக்பூர் மற்றும் கவுகாத்தியில் தொடங்கப்பட்டன. தேசிய முக்கியத்துவம் பெற்ற இந்த நிறுவனங்களின் வேந்தர் (Chancellor) - குடியரசுத் தலைவர். 1961ஆம் ஆண்டு நாடாளுமன்றச் சட்டத்தின் கீழ், இந்த நிறுவனங்கள் கொண்டு வரப்பட்டன. 1963இல் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டு, வெகு மக்களின் மேம்பாடே இதன் நோக்கம் என்று சட்டப்பூர்வமாக அறிவிக்கப் பட்டது. மக்கள் வரிப்பணத்தில் வெகு மக்கள் மேம்பாட்டுக்காக நடத்தப்படும் இந்த நிறுவனம், “பூணூல்”களுக்குள் முடக்கப்பட்டு விட்டது. நிறுவனம் தொடங்கப்பட்டு, 20 ஆண்டுகள் வரை அரசியல் சட்டம் உறுதி செய்திருந்த தாழ்த்தப் பட்டோர் பழங்குடியினருக்கான இடஒதுக் கீட்டையே பின்பற்ற மறுத்துவிட்டனர். 1978ஆம் ஆண்டுதான் அதுவும் நீதிமன்றத் தலையீட்டுக்குப் பிறகே தலித் பிரிவினருக்கான இடஒதுக்கீட்டைப் பின்பற்ற ஒப்புக் கொண்டனர். அதுவும்கூட கண் துடைப்புதான். அய்.அய்.டி. வரலாற்றில், இதுவரை இந்த இடஒதுக்கீட்டுக்கான இடங்கள் பூர்த்தி செய்யப்பட்டதே இல்லை. இப்போதும் என்ன நிலை? அய்.அய்.டி. மனிதவளம் மற்றும் சமூக விஞ்ஞானத் துறை, இளம் பேராசிரியர் அருள் சுதர்சன், தகவல் பெறும் உரிமை சட்டத்தில் பெற்றுள்ள தகவல்களே இதை உறுதி செய்கின்றன.

2008-லிருந்து 2015 வரை ஆய்வுப் பட்டப் படிப்புக்கு (பிஎச்.டி.) அனுமதிக்கப்பட்ட தலித் மாணவர் எண்ணிக்கை 142. பழங்குடி மாணவர் எண்ணிக்கை 9. திறந்த போட்டி வழியாக நுழைந்த பார்ப்பனர்கள் - 1592 பேர். மேல் பட்டப் படிப்புக்கு (எம்.எஸ்.) பொது போட்டி வழியாக நுழைந்த பார்ப்பனர் - 1194 பேர். இதில் வெகு சிலர் மட்டுமே (முன்னேறிய பிற ஜாதிப் பிரிவினர்) இதில் பிற்படுத்தப்பட்டோர் 740. தலித் மாணவர்கள் 29 பேர் பழங்குடிப் பிரிவு மாணவர் 3 பேர். இது தவிர, ஏனைய துறை களில் பொதுப் போட்டி வழியாக நுழைந்தவர்கள் 1,194 பார்ப்பன/உயர்ஜாதியினர். 429 பேர் பிற்படுத்தப்பட்டவர்கள். 650 பேராசிரியர், துணைப் பேராசிரியர்களும், 8000 மாணவர்களும், 3000 ஊழியர்களும் பணியாற்றும் மிகப் பெரும் கல்வி நிறுவனத்தில் இடஒதுக்கீடு கொள்கைகள் திட்ட மிட்டு புறக்கணிக்கப்படுவதை இந்த புள்ளி விவரங்கள் உறுதிப்படுத்துகின்றன. (தகவல்: ‘பிரண்ட்லைன்’, ஜூன் 26, 2015)

இவ்வளவுக்குப் பிறகு, 2008ஆம் ஆண்டு மத்திய மனித வளத்துறை அமைச்சகம், இடஒதுக்கீட்டை உறுதி செய்யக் கோரி குறிப்பாணை ஒன்றை அய்.அய்.டி.க்கு அனுப்பியது. தலித் பிரிவினருக்கு 15 சதவீதம், பழங்குடியினருக்கு 7.5 சதவீதம், பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவீதம். ஆசிரியர்-மாணவர் தேர்வுகளில் உறுதி செய்ய வேண்டும் என்று அந்த குறிப்பாணை வலியுறுத்தியது. அய்.அய்.டி. நிறுவனம், அந்த ஆணையை அமுல்படுத்த மறுத்ததோடு, அதை எதிர்க்கவும் முடிவெடுத்தது. அய்.அய்.டி., தனது ‘செனட்’ கூட்டத்தைக் கூட்டி, இடஒதுக்கீட்டு ஆணையை நிறைவேற்ற முடியாது என்று தீர்மானமே நிறைவேற்றியது. மத்திய மனித வளத் துறை தனது குறிப்பாணையை திரும்பப் பெற வேண்டும் என்றும் ஆட்சிக்கே அறிவுறுத்தியது. வெகு மக்கள் மேம்பாட்டுக்காக உருவாக்கப்பட்ட நிறுவனம், தலித், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு அவர்களுக்கான சட்டப்படியான உரிமைக் கதவுகளை இழுத்து மூடியது.

இந்த நிறுவனங்களில் மக்கள் வரிப் பணத்தில் படித்த ‘அறிவாளிகள்’ இறுதியாண்டு படிக்கும் போதே வெளிநாடுகளில் வேலை நியமன ஆணை களையும் விசாவையும் பெற்றுக் கொண்டு பட்டம் பெற்ற உடனேயே விமானம் ஏறி விடுகிறார்கள். இந்தியாவில் குறைந்தது சில பல ஆண்டுகளாவது பணியாற்றுவதை கட்டாயப்படுத்தும் நிபந்தனை களைக் கூட எதையும் இந்த ‘தேசபக்த’ நிர்வாகங்கள் விதிக்கத் தயாராக இல்லை.

### இடஒதுக்கீடு எதிர்ப்புப் போராட்டக்களம்

உயர்கல்வியில் 27 சதவீதம் பிற்படுத்தப்பட் டோருக்கு இடஒதுக்கீடு செய்வதற்கான சட்டத் திருத்தம் வந்தபோது, இடஒதுக்கீடு எதிர்ப்புப் போராட்டக் களமாக இந்த உயர்கல்வி நிறுவனங்கள் மாற்றப்பட்டன. அதற்கெல்லாம் நிர்வாகம் தாராளமான சுதந்திரத்தை வழங்கவே செய்தது. அய்.அய்.டி. வளாகத்துக்குள் மட்டுமல்ல; வெளியே வந்தும் போராடினார்கள். 2006, மே 15 அன்று இடஒதுக்கீட்டை எதிர்த்து, சென்னை சேப்பாக்கம் அரசு விருந்தினர் மாளிகை முன்பு, அய்.அய்.டி. மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்த அய்.அய்.டி. நிர்வாகம் அனுமதித்தது. அப்போதெல்லாம் மாணவர்களுக்கு அரசியல் தேவையா என்ற கேள்வியை எழுப்புவதற்கு அய்.அய்.டி. ‘அறிவு ஜீவிகள்’ தயாராக இல்லை. அம்பேத்கர்-பெரியார் படிப்பு வட்டம் வரும்போது மட்டும்தான் இவர்கள் ஆவேசத்துடன் மாணவர்களிடையே பிளவு ஏற்படுத்தக் கூடாது என்றும், அரசியல் நுழையக் கூடாது என்றும் ‘வேதாந்தம்’ பேசுகிறார்கள். இவை மட்டுமா?

4ஆம் பக்கம்)

## பழங்குடிப் பெண் ‘சுஜி’க்கு இழைத்த அநீதி

2000ஆம் ஆண்டில் சென்னை அய்.அய்.டி. யில் நடந்த ஒரு நிகழ்வை சுட்டிக்காட்ட வேண்டும். பழங்குடி–தலித் இணையர்களுக்குப் பிறந்த சுஜி என்ற பழங்குடி பெண், 12ஆம் வகுப்பில் ஆந்திராவில் முதல் மாணவியாக தேர்ச்சி பெற்று, மாநில அரசின் விருது பெற்றவர். மாதம் ரூ.17,500 உதவித் தொகை பெற்று, 4 ஆண்டு பொறியியல் படிப்பை முடிக்க முடியும். ஆந்திராவிலே தலைசிறந்த உயர் கல்வி நிறுவனங்கள் தங்கள் நிறுவனங்களில் சேர்ந்து படிக்க அழைப்பு விடுத்தும்கூட, அந்தப் பெண், சென்னை அய்.அய்.டி.யிலேயே படிக்க விரும்பினார். (பொதுவாக அய்.அய்.டி.களில் மாணவர்கள் சேர்க்கை தான் அதிகம் இருக்கும். மாணவிகள் மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே சேர்க்கப்படுகிறார்கள். இதிலும்கூட மனுதர்மக் கொள்கைதான்) தலித் மாணவர் என்றால் அவர்களுக்காக ஓராண்டு கூடுதல் படிப்பு. அதற்குப் பெயர் ‘தயாரிப்புப் பயிற்சி’. மாநிலத்திலே முதலிடம் பெற்ற மாணவியாக இருந்தாலும்கூட தலித் என்றால் அவருக்கும் தனிப் பயிற்சி கட்டாயம். இயற்பியல் (Physics) மிகச் சிறந்த அறிவு பெற்றவர் சுஜி. தனிப் பயிற்சி வகுப்பில் டாக்டர் எம்.வி. சத்யநாராயணன் என்ற பார்ப்பனப் பேராசிரியர், வகுப்பில் இயற்பியல் தொடர்பாக ஒரு பாடத்தில் தடுமாறிக் கொண்டிருந்தபோது, மாணவி சுஜி, பேராசிரியர் பாடத்தில் செய்த தவறை திருத்தினார். அவ்வளவுதான். தனக்கு அவமானம் நேர்ந்து விட்டதாகக் கருதிய அந்த பேராசிரியர், அந்த மாணவியை தனிப் பயிற்சி தேர்விலேயே தோல்வியைத் தழுவச் செய்தார். அதிர்ச்சியுற்ற மாணவியின் பெற்றோர்கள், அப்போது அய்.அய்.டி. எதிர்ப்புப் போராட்டக்களத்தில் நின்ற பெரியார் திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளர் என்ற முறையில் என்னை (விடுதலை இராசேந்திரன்) இல்லத்தில் சந்தித்து, கண்ணீர் விட்டனர். உடனே களத்தில் இறங்கினோம். பெரியார் திராவிடர் கழகம் பல்லாயிரக்கணக்கில் சுவரொட்டிகள் அச்சடித்து, அதன் வழியாக இந்த அநீதியை சென்னை நகரம் முழுதும் மக்களிடையே கொண்டு சென்றது. தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையத்தை அணுகி நடவடிக்கை எடுக்க வலியுறுத்தினோம். அய்.அய்.டி. வளாக வாயிலிலேயே பொதுக் கூட்டம் நடத்தி, நிர்வாகத்தின் முறை கேடுகளை அம்பலப்படுத்தி னோம். தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையம் அய்.அய்.டி.யிடம் விளக்கம் கேட்டது.

தேசிய – தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் ஆணையத்தின் சார்பில் அதன் உதவி இயக்குனர் ஏ.சத்ய நாராயணன், 8.6.2000 அன்று சென்னை அய்.அய்.டி. இயக்குனர் நடராஜனுக்கு ஒரு தாக்கீது அனுப்பினார். அதில், “தயாரிப்புப் பயிற்சியில் தோல்வி அடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ள பழங்குடிப் பிரிவு மாணவி சுஜியின் விடைத்தாளை மறு மதிப்பீடு செய்ய வேண்டும். அல்லது மீண்டும் தேர்வு எழுத அனுமதிக்க வேண்டும். இதை செய்து முடித்த பிறகே அதிகாரபூர்வ தேர்வு முடிவுகளை வெளியிட வேண்டும். அதுவரை இப்போது வெளியிடப்பட்ட தேர்வு முடிவுகளை நிறுத்தி வைக்க வேண்டும்” என்று அந்த தாக்கீதில் திட்டவட்டமாக அறிவுறுத்தப்பட்டது. பெரியார் திராவிடர் கழகம் மேற்கொண்ட முயற்சிகளுக்கு கிடைத்த வெற்றி இது.

– புரட்சிப் பெரியார் முழக்கம் 21.11.2019

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# தொடரும் ‘தலித்’ மாணவர் தற்கொலைகள்

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரை 50க்கும் மேற்பட்ட தலித் மாணவர்கள் வளாகத்துக்குள்ளேயும் விடுதிகளிலும் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். மூன்று ஆண்டுகளுக்குமுன் ரூர்க்கேலா அய்.அய்.டி. வளாகத்தில் மனிஷ்குமார் என்ற ‘சாமார்’ சாதிப் பிரிவில் பிறந்த (செருப்பு தைக்கும் சமூகம்) மாணவர், வளாகத்துக்குள் பிணமாகக் கிடந்தார். அவரது சாவின் ‘மர்மம்’ அப்படியே நீடிக்கிறது. 2014ஆம் ஆண்டு பம்பாய் அய்.அய்.டி. விடுதியில் அனிஹட் அம்ப்ஹோர் என்ற தலித் மாணவர் மர்மமாக இறந்து கிடந்தார். ஜாதி அவமானத்துக்கு உள்ளாகியே தனது மகன் பிணமானார் என்று பெற்றோர்கள் புகார் தந்தார்கள். எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அய்.அய்.டி.க்கு எதிரான போராட்டங்கள் எதையும், தமிழ்நாட்டின் ஆங்கில-தமிழ் நாளேடுகள் இருட்டடித்தன. அய்.அய்.டி. நிர்வாகம் பத்திரிகைகளோடு நெருக்கமான தொடர்புகொண்டு, செய்திகள் வராமல் பார்த்துக் கொண்டது. மறைந்த பேராசிரியர் முனைவர் எம்.எஸ்.எஸ். பாண்டியன், ‘எக்னாமிக் அண்ட் பொலிட்டிக்கல் வீக்லி’யில் இது பற்றி எழுதினார். ‘ஸ்டேட்ஸ்மேன்’, ‘இந்துஸ்தான் டைம்ஸ்’ நாளேடுகள் மட்டும் துணிந்து சுஜி பழிவாங்கப்பட்ட செய்திகளை வெளியிட்டன. (அதற்காக, அந்த ஏடுகளின் செய்தியாளர்கள் முறையே ஜெயா மேனன் மற்றும் பகவான் சிங் மீதும் அந்த ஏடுகளின் நிர்வாகத்தின் மீதும் அய்.அய்.டி. இயக்குனர் அவதூறு வழக்கு தொடர்ந்தார்) இவ்வளவு போராட்டத்துக்குப் பிறகு அய்.அய்.டி. நிர்வாகம், அதன் வரலாற்றிலேயே முதன் முதலாக தலித் மாணவியை தோல்வி அடையச் செய்த தனது அநீதியான முடிவை திரும்பப் பெற முன் வந்தது. சுஜி, தொடர்ந்து படித்தாலும் அவரால் கல்வியை அங்கே தொடர முடியவில்லை.

சில ஆண்டுகளுக்கு முன், அனுப்குமார் எனும் மாணவர், ‘அய்.அய்.டி.’களில் ஜாதியம் குறித்து நேரடி விசாரணை நடத்தி, ஆய்வுக் கட்டுரை ஒன்றை வெளியிட்டார். இதேபோன்று பல்கலைக்கழக நிதிக் குழுவின் முன்னாள் தலைவர் சுகதேவ் தோரட். நேரடி ஆய்வுகளை நடத்தி, 72 சதவீத தலித் மாணவர்கள் புறக்கணிப்புக்கும் அவமானத்துக்கும் உள்ளாகிறார்கள் என்பதை வெளிச்சப்படுத்தினார் (டைம்ஸ் ஆப் இந்தியா, செப்.2014).

## சைவ-அசைவ உணவு பாகுபாடு

சில மாதங்களுக்கு முன், ஆர்.எஸ்.எஸ். தலைவர் ஒருவர், மனித வளத்துறைக்கு எழுதிய கடிதத்தை அந்த அமைச்சகம் அனைத்து அய்.அய்.டி.களுக்கும் நகல் எடுத்து அனுப்பி, அதன் பேரில் விளக்கம் கேட்டது. சைவம், அசைவம் சாப்பிடுகிற மாணவர்களை, ஒரே இடத்தில் உணவருந்த அய்.அய்.டி. அனுமதிப்பதாக அந்த ஆர்.எஸ்.எஸ். தலைவரின் கடிதத்தில் புகார் தெரிவிக்கப்பட் டிருந்தது. சென்னை அய்.அய்.டி., உடனே இதற்கு பதில் எழுதியது. சைவ, அசைவ உணவுகள் ஒரே உணவு கூடத்தில் சாப்பிட அனுமதிக்கப்படுவது இல்லை என்பதே அய்.அய்.டி. தந்த பதில். சென்னை அய்.அய்.டி.யின் இணையதளம் உணவு விடுதிகள் பற்றிய தகவல்களைத் தந்துள்ளது. இதன்படி 15 மாணவர் விடுதிகளும் இரண்டு மாணவியர் விடுதிகளும் இவற்றிற்கு 6 உணவுக் கூடங்களும் செயல்படுகின்றன. இதில் அய்ந்து உணவுக் கூடங்கள் (பெண்கள் உணவுக் கூடங்களும் சேர்த்து) தனியார் நடத்துபவை. ஒரு உணவுக் கூடத்தை அய்.அய்.டி. நிர்வாகமே நடத்துகிறது. இது தவிர, பல்வேறு உணவகங்கள் ஒரே இடத்தில் செயல்படும் உணவுக் கூடமும் (Food Court) உண்டு. அனைத்து உணவுக் கூடங்களிலும் அசைவ உணவுகள் முழுமையாக தடைசெய்யப்பட்டுள்ளன. சைவ உணவு மட்டுமே அனுமதிக்கப்படுகிறது. சைவத்திலேயே சமண மதத்தினருக்கு மட்டும் தனி சமையல் கூடம். அசைவ உணவை விரும்பும் மாணவர்கள் வெளியிலிருந்து எடுத்து வந்து வளாகத்துக்குள் சாப்பிடலாம் என்ற அனுமதி மட்டும் இருக்கிறது. இதுவும் எந்த நேரத்திலும் பறிக்கப்பட்டுவிடலாம் என்று அம்பேத்கர்-பெரியார் படிப்பு வட்ட மாணவர்கள் தங்கள் இணையத்தில் வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார்.

நவீன தொழில்நுட்பக் கல்வி வளாகம் ஒன்று - அதுவும் வெகு மக்கள் நலனுக்காக உருவாக்கப்பட்டதாகக் கூறிக் கொண்டு வெகுமக்கள் உணவு முறைக்கு தடை போடுகிறது. இவர்கள் படித்த உடனேயே சைவ-அசைவ உணவு வேறுபாடுகள் ஏதுமற்ற - வெளிநாடுகளுக்கு வேலைக்குப் போகக் காத்துக் கிடப்பவர்கள். அத்தகைய வளாகத்துக்குள்ளேயே ‘அசைவ’ உணவு வெறுப்புக்கும் தடைக்கும் உள்ளாக்கப்படுகிறது. உழைக்கும் மக்களின் உணவுக் கலாச்சாரமே இங்கு அவமதிக்கப்படுகிறது. இதற்குப் பெயர் கல்வி வளாகமா அல்லது சங்கர மடமா? என்று கேட்க வேண்டியிருக்கிறது.

மோடி ஆட்சிக்கு வந்தப் பிறகு, ஒவ்வொரு துறையின் பெயர்ப் பலகையும் சமஸ்கிருதமாக்கப்பட்ட இந்தி மொழிகளிலேயே மாற்றப்பட்டுள்ளன. இந்தி தெரிந்த மாணவர்களால்கூட இதைப் படிக்க இயலவில்லை என்று தொலைக்காட்சி விவாதங்களில் அய்.அய்.டி. மாணவர் கூறுகின்றனர். நாடாளுமன்ற தோதலுக்கு முன்பு காங்கிரசின் பொருளாதாரக் கொள்கையை கடுமையாக விமர்சிக்கும் கருத்தரங்குகளை அய்.அய்.டி. நிர்வாகமே ஏற்பாடு செய்தது. குருமூர்த்தி, அரவிந்த் நீலகண்டன் போன்ற ஆர்.எஸ்.எஸ். ஊதுகுழல்களை அய்.அய்.டி. நிர்வாகம் பேச வைத்து, மோடிக்கு மறைமுக ஆதரவைத் திரட்டியது என்ற செய்தியை மாணவர்கள் தொலைக் காட்சி விவாதங்களில் கூறினர். ஆர்.எஸ்.எஸ். அமைப்பும் அதன் ‘ஷாகாக்களும்’ அய்.அய்.டி.யில் அனுமதிக்கப்படுவதோடு, ‘அரே ராமா அரே கிருஷ்ணா’ அமைப்பும் அதற்குரிய ‘பூணூல்-குடுமி’ அடையாளங்களோடு வலம் வருகின்றன.

அய்.அய்.டி. தொடங்கியது முதல் இயக்குனர்களாக பி.வி. இந்திரேசன், எல்.எஸ். சிறீநாத், என்.வி.சி. சாமி, ஆர்.நடராஜன், அனந்த் என்று தொடங்கி, பாஸ்கர் இராமமூர்த்தி என்று பார்ப்பனர்கள் மட்டுமே தொடருகின்றனர். இவர்களின் ‘சாம் ராஜ்யத்தில்’ பதவி நியமனங்களில் வெளிப்படைத் தன்மை ஏதும் பின்பற்றாமல், கொல்லைப்புற வழிகளில் ‘அட்ஹாக்’ நியமன முறைகள் பின்பற்றப்படுகின்றன. ஏடுகளில் விளம்பரங்கள் வெளியிடப்படுவதும் இல்லை. இந்த முறைகேடுகளை எதிர்த்து, ஏராளமான வழக்குகள் உயர்நீதிமன்றங்களில் குவிந்து கிடக்கின்றன. ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல் நாடாளுமன்ற சட்டத்தின் வழியாக உருவாக்கப்பட்ட, இந்த நிறுவனங்கள் பெற்றுள்ள சுயாட்சி உரிமைகள் முறைகேடாகவே பயன்படுத்தப்படுகின்றன. சென்னை அய்.அய்.டி., அதிகாரக் குவியல்களை சட்டப்பூர்வமாக்கி, அதற்கேற்ற திருத்தங்களையும் உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

அய்.அய்.டி. சட்டத்தின் 13(5)ஆவது பிரிவு ஒரு பேராசிரியரையோ ஊழியரையோ விளக்கம் ஏதும் கேட்காமலே பதவி நீக்கம் செய்ய முடியும். பிரிவு 12(1) - நியமனங்களுக்கான விளம்பரத்தை வெளியிடாமல், இயக்குனர் பரிந்துரையை ஏற்று நிர்வாகக் குழுவே நியமனம் செய்ய முடியும் என்ற உரிமையை வழங்குகிறது. அதுமட்டுமின்றி தற்போதுள்ள சட்டங்களையே மாற்றியமைக்கவும், உத்தரவுகளைப் பிறப்பிக்கவும், இயக்குனருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த சட்டத்திருத்தங்களுக்கு நாடாளுமன்ற ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்ற சட்ட நடைமுறை பின்பற்றப்படாமல், அனைத்தையும் புறந்தள்ளி, ‘மனுதர்ம’ ஆட்சியை அங்கே நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

– நமது செய்தியாளர்

# கோத்தபய வெற்றிக்கு இந்தியா ஆதரவு

(முதல் பக்கத் தொடர்ச்சி)

உரிமை மீறல் விசாரணை நடக்குமா என்பதே கேள்விக்குரியாகியிருக்கிறது.

தங்களுக்கான வரலாற்று அடிப்படையிலான தாயகத்தையும் தனித்துவமான மொழி இன அடையாளங்களையும் கொண்டு வாழ்ந்த தமிழர்கள் தங்களுக்கான சுயாட்சியை நிறுவிக் கொள்ளும் உரிமை படைத்தவர்கள். கடந்த காலங்களில் தமிழர்களுக்கான அதிகாரப் பகிர்வுகள் குறித்த உடன்பாடுகளை இலங்கை அரசு மதிக்காத நிலையில்தான் ‘தமிழ் ஈழம்’ என்ற இலட்சியப் போராட்டத்தை விடுதலைப்புலிகள் தொடங்கினார்கள். ஆயுதப் போர் முடிவுக்கு வந்த நிலையில் இலங்கையின் அரசியல் சட்டம் தமிழர்களுக்கான அதிகாரப் பகிர்வுகளை வழங்கி மாற்றியமைக்கப்படும் என்று இலங்கை அரசு தந்த உறுதி மொழியில் எந்த முன்னெடுப்பும் இல்லை. “இலங்கை ஒற்றை ஆட்சிதான்” என்று தேர்தல் முடிவுக்குப் பிறகு சிங்கள தீவிரவாதிகள் பேசத் தொடங்கி விட்டார்கள்.

## இந்தியாவின் நிலை என்ன?

காங்கிரஸ் ஆட்சியில் வெளியுறவுக் கொள்கை தமிழர்களுக்கு எதிராகவும் இலங்கைக்கு ஆதரவாகவுமே இருந்தது. செல்வாக்கு மிக்க பார்ப்பன அதிகாரவர்க்கம் தமிழர்களுக்கு ஈழத்தில் உரிமைகளோ, விடுதலையோ கிடைத்து விட்டால், தமிழ்நாட்டில் அது எதிரொலிக்கும் என்ற ஒரே கண்ணோட்டத்துடனேயே செயல்பட்டது. காங்கிரஸ் ஆட்சியைத் தொடர்ந்து பதவிக்கு வந்த பா.ஜ.க. ஆட்சியும் இதே கொள்கையை இன்னும் தீவிரமாக பின்பற்றி வருகிறது.

இது குறித்து சுகாசினி ஹரிதார் என்பவர் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு ‘இந்து’ ஆங்கில நாளேட்டில் (நவம்.18, 2019) எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ள கருத்துகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவையாகும்.

கோத்தபய ராஜபக்சே சீனாவுக்கு ஆதரவாகவே செயல்படுவார் என்ற கருத்து பொதுவாக நிலவினாலும் இலங்கையில் இந்திய தூதரக அதிகாரிகள் கோத்தபயவுக்கு ஆதரவாகவே இருந்தனர் என்றும் தேர்தலுக்கு முன்பு இரண்டு முறை கோத்தபயவை சந்தித்து இந்தியா-இலங்கைக்குமிடையே பாரம்பர்யமாக தொடரும் உறவுகள் நீடிக்க வேண்டும் என்பதே இந்தியாவின் விருப்பம் என்றும் தெரிவித்ததாகவும் அந்த கட்டுரையாளர் குறிப்பிட்டுள்ளார். வடக்கு-கிழக்கு மாநிலங்களில் பதட்டங்களைத் தவிர்க்க தனக்கு இந்தியாவின் ஆதரவு தேவை என்று கோத்தபய இந்திய அதிகாரிகளிடம் கூறியதாகவும் கட்டுரையாளர் சுட்டிக் காட்டுகிறார்.

2014ஆம் ஆண்டு இதே கோத்தபய புதுடில்லி வந்தபோது அவரிடம் கொழும்புத் துறைமுகத்தில் சீன போர்க் கப்பல்கள் நிறுத்தப்பட்டிருப்பதற்கு இந்திய அதிகாரிகள் கடும் கண்டனம் தெரிவித்தனர். தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், கோத்தபயவிடம் கடும் எதிர்ப்பு தெரிவித்த பிறகும்கூட அடுத்த ஒரு வாரத்தில் சீன கப்பல் படைக்கு சொந்தமான நீர்மூழ்கிக் கப்பல், கொழும்புத் துறைமுகத்தில் நிலைகொள்ள இலங்கை அரசு அனுமதித்தது. ஆனால் காலப் போக்கில் எதிர்ப்புகள் மறைந்து இந்தியாவுடன் சுமூக நிலை உருவாகிவிட்டது என்று கட்டுரை கூறுகிறது.

மெஜாரிட்டிகள்தான் ஆள வேண்டும்; மைனாரிட்டிகள் அடங்கிப் போகவேண்டும் என்பது ஜனநாயகத்துக்கும் சமநீதிக்கும் எதிரானது. மெஜாரிட்டி, மைனாரிட்டி என்ற கோட்பாடுகளைவிட ‘ஈக்வாலிட்டி’ (சமத்துவம்) என்பதே ஒரு ஜனநாயகத்தின் அடிப்படை அம்சம்.

“இந்துக்கள் மெஜாரிட்டி- எனவே இது இந்துக்கள் நாடு; மைனாரிட்டிகள் அடங்கிப் போக வேண்டும்” என்று இந்தியாவில் சங்பரிவாரங்களும் பா.ஜ.க.வும் பேசும் ‘மதவாதம்’ - ஜனநாயக அமைப்புக்கு எதிரானது. ‘இந்து’ இந்தியா என்ற ‘பெரும்பான்மை’ வாதம், தமிழர்களுக்கு எதிராக நிற்பது போலவே, இலங்கையின் சிங்கள மெஜாரிட்டி வாதம், ஈழத் தமிழர்களின் உரிமைகளைப் பறித்துக் கொண்டிருக்கிறது.

இலங்கையின் போர்க் குற்றங்களுக்கு எதிராகவும், தமிழர்கள் சுயநிர்ணய உரிமைக்காகவும், சர்வதேச நிர்ப்பந்தங்களை உருவாக்குவதுதான் இப்போது உலகத் தமிழினத்தின் முதன்மை செயல் திட்டமாக இருக்க முடியும்.

– ‘இரா’

55 வருட பட்டின் பாரம்பரிய ஸ்தாபனம்...
சிந்தாமணி சில்க்ஸ்
கைத்தறி திருமண பட்டு சேலை தயாரிப்பாளர்
& மொத்த விற்பனையாளர்
ஹோல்சேல் கடை
சிந்தாமணியூர், ஓமலூர் வழி, சேலம்.(DT).
04290 248304/ 90952 48304
chinthamanisilks | www.chinthamanisilks.com

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகை யாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 21st November 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN